★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4 | சென்னை: ஐப்பசி 7௳ செவ்வாய் (23—10—56) ★ ★ வெளியீடு: ஐப்பசி 8௳ புதன் (24—10—56) | இதழ் 115

வேர்க்கடலையிலிருந்து செயற்கைப் பால்!

★

சென்னை, அக். 23—

வேர்க்கடலையிலிருந்து பசும்பாலுக்குச் சமமான எல்லாச் சத்துக்களும் நிறைந்த செயற்கைப்பால், மைசூரில் உள்ள உணவு ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். இந்த செயற்கைப் பாலின் விலை பசும்பாலின் விலையில் நான்கில் ஒரு பங்குதான் என்று கூறப்பட்டுள்ளது.

காங்கிரஸ் வாழ்வதற்குக் காரணம் என்ன?

நெல்லையில் தேர்தல் ஆய்வுக் குழுவினர்

நூற்றுக்கணக்கான கழகப் பிரதிநிதிகள் உற்சாகமுடன் சாட்சியமளித்தனர்

தேர்தல் ஆய்வுக் குழுவினர் 19—10—56 காலை 10 மணிக்கு நெல்லை நகர் வந்து சேர்ந்தனர். ஆய்வுக் குழுவின் அலுவல்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐஸ் பாக்டரி மாடியில் கழகத் தோழர்களும் பொதுமக்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர். அக்கட்டிடம் வளைவுகள், தோரணங்கள் ஆகியவைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஆய்வுக் குழுவினரை நெல்லை மாவட்டத் துணைச் செயலாளர் டபிள்யூ. டி. துரைசாமி, நெல்லை நகர தி. மு. கழகச் செயலாளர் சங்கரநாராயணன் ஆகியோரும் மலர்மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஆய்வுக் குழுவின் பணியை விவரித்தும், அதற்கான விவரங்களைத் தருமாறும்; மற்றும் தேர்தல் நிதியைத் திரட்டி அனுப்பவேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

அடுத்து ஆய்வுக் குழுவினரான இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் தனி அறையில் வீற்றிருந்து, கழகப் பிரதிநிதிகளிடமும், பிரமுகர்களிடமும் தொகுதிவாரியாகத் தேர்தல் சூழ்நிலைக்கான விவரங்களை அறிந்து பதிவு செய்து கொண்டனர். மாலை 4 மணிக்கு ஆய்வுக் குழுவின் பணி முடிவுற்றது. பொதுச்செயலாளர் அனைவருக்கும் ஆய்வுக் குழுவின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்தார்.

உடனே ஆய்வுக் குழுவினர் நாகர்கோவிலுக்குப் புறப்பட்டனர்; மாவட்டத் துணைச்செயலாளரும் மற்றுமுள்ள கழகத் தோழர்களும், மாணவர்களும் வாழ்த்தொலிகளுடன் வழியனுப்பினர்.

நெல்லை மாவட்டத்தில் பல்வேறு தொகுதிகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள், ஒவ்வொரு தொகுதியிலும் கழகம் போட்டியிட வேண்டுமென்று ஆர்வமுடனும் உறுதியுடனும், மக்களின் எண்ணத்தை ஆய்வுக் குழுவினரிடம் வலியுறுத்தினர்.

நாஞ்சில் மாவட்டத்தில்

தேர்தல் ஆய்வுக் குழுவினர் 19-10-56 மாலை 6-15 மணிக்கு நாகர்கோயிலுக்கு வந்து சேர்ந்தனர்.

நகர் எல்லையில் நாஞ்சில் மாவட்டச் செயலாளர் குமாரசாமி, மத்திய செயற்குழு உறுப்பினர் வி. எம். ஜான், தோழர் கி. மனோகரன், மற்றும் உள்ளூர் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் ஏராளமாகத் திரண்டிருந்து, மலர் மாலைகளை அணிவித்து வரவேற்றனர்.

பின் அங்கிருந்து ஆய்வுக்குழு கூடும் இடமாகிய நாஞ்சில மாவட்ட தி மு கழக அலுவலகத்திற்கு, ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அவ்விடம் கூடியிருந்த மக்கள் மிகுந்த ஆரவாரத்திற்கிடையேயும் கைதட்டுதல் மூலமும் ஆய்வுக் குழுவினரிடம் தங்களின் மகிழ்ச்சியைக் காட்டினர்.

பொதுச்செயலாளர் துவக்கத்தில் அனைவருக்கும் ஆய்வுக் குழுவின் சார்பில் நன்றியைத் தெரிவித்து, ஆய்வுக் குழுவினர் கேட்கும் விவரங்களை அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர், நாஞ்சில் மாவட்டத்தில் தேர்தல் சூழ்நிலைக்கான விவரங்களைக் குறித்து தொகுதிவாரியாக வந்திருந்த பிரதிநிதிகள் அனைவரிடமும் தனித்தனியாகக் கேட்டுப் பதிவு செய்தனர். இங்கு விசாரணை இரவு 10-30 மணிக்கு முடிவுற்றது.

மறுநாள் 20-10-56 காலை 8 மணிக்கு, ஆய்வுக்குழுவினர் கேரளப் பிரதேச தி. மு. கழகத் தோழர்களின் வேண்டுகோளின்படி கழக அமைப்புவேலை குறித்து ஆலோசனை செய்ய திருவனந்தபுரம் புறப்பட்டுச் சென்றனர். தோழர் கி. மனோகரன் அவர்களும் உடன் சென்றார்.

கேரளப் பிரதேச தி. மு. கழகம்

20—10—56-ல், திருவனந்தபுரம் செல்லும் வழியில் காலை 10-30 மணிக்கு கேரளப் பிரதேசத்திலுள்ள பாலராமபுரத்தில் தி. மு. கழகச் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. காலை வெயிலாயிருந்தும் அந்த வரவேற்பில் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், ஈ.வெ.கி. சம்பத் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், மனோகரன் ஆகியோருக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

எதிர்க் கட்சிகள் ஒரு கை விரல்களாயில்லை!

வேற்றுமைகள் இருப்பினும் ஒன்றுபட்ட மனப்போக்கு தேவை

திருவல்லிக்கேணியில் அண்ணா விளக்கம்

மாற்றுக் கட்சிகளிடை நல்லெண்ணம் வேண்டுமென்கிறார்

20-10-56 மாலை சென்னை-திருவல்லிக்கேணியில், தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையின் முதற்பகுதி இன்று தரப்படுகிறது; தொடர்ந்து அவரது சொற்பொழிவு வெளிவரும்.

"இந்த நடுத்தெருவில் மக்கள் எல்லாம் மிகுந்த கஷ்டங்களுக்கிடையே கூடியிருக்கிறார்கள். இங்கே நாம் கூடுவதற்குக்காரணம், நாட்டை ஆளுகிற சர்க்கார், நாமெல்லாம் கூடிப் பேசுவதற்கு ஆங்காங்கே நல்ல திடல்களை வசதி செய்துதரவில்லை என்பதுதான்.

"மேலும் நாம் இப்படி அடிக்கடி கூடவேண்டியிருப்பதற்கும் காரணம், இந்த சர்க்கார்தான்!

"நாட்டில் நல்லாட்சி இருக்குமானால், பேசப்பட வேண்டிய பிரச்சினைகள் குறைவாக இருந்திருக்கும் நல்ல ஆட்சி இல்லாமையினால்தான் பிரச்சினைகள் வளருகின்றன—பேச வேண்டியுள்ளது.

"நல்ல கணவனுமிருந்தால், வீட்டு விவகாரங்கள் வெளியே தெரியாது; குடும்பம் சுமுகமாக நடைபெறும்; கொஞ்சம் ஏறுமாறான கணவனுமிருந்தால் அக்கம் பக்கத்தார் அவன் வீட்டு விவகாரத்திற்கு நியாயம் கூறவேண்டிய நிலை தானே ஏற்படும்?

"அதுபோலத்தான், நல்லாட்சி இல்லாமையால் நாம் நடுத்தெருவில் கூடிப் பேசவேண்டியவர்களாயுள்ளோம்.

"நாம் கூடியிருக்கிறநேரம் எப்படிப்பட்டது? 'தமிழ் நாடு' என்று தாயகத்திற்குப் பெயரிட வேண்டும் என்பனபோன்ற சில கோரிக்கைகளுக்காக 77 நாட்களுக்குமேல் உண்ணாவிரதம் இருந்து உயிர்விட்டிருக்கிறார் உத்தமர் சங்கரலிங்கனார்!

"தோழர் கே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்ட வேதனையைத் தாங்கிக் கொண்டிருக்கிறது நமது இதயம்!

"தமிழகத்தின் எல்லைகள் சரிவர வரையறுக்கப் படவேண்டும் என்பதற்காகத் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்.

"இப்படி நடைபெறும் நிகழ்ச்சிகள் எதையுமே காணாதவராய்—கேளாதவராய் காமராசர், முதன் மந்திரியாக வீற்றுக்கொண்டிருக்கிறார்.

"இந்த நேரத்தில்தான் நாம் இங்கே கூடியுள்ளோம்.

"நாட்டில், 'இன்னின்ன கடைகளில் இன்னின்ன கிடைக்கும்!' என்று விளம்பரப்படுத்தப்பட்ட கடைகள் பல இருக்கின்றன; அதுபோல, இன்னின்ன கொள்கைகளும், இலட்சியங்களும் கொண்டவை என்ற விளக்கத்தோடு கட்சிகள் பலவும் நாட்டில் இன்று இருந்திடக் காண்கிறோம்.

'ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறான கொள்கைகளும், இலட்சியமும், வேலைத் திட்டங்களும் இருக்கின்றன.

"சூயஸ் நெருக்கடி, ஒரு கட்சிக்கு முக்கியமானதாக—பிரதானமானதாகத் தெரியலாம்.

"டிட்டோவுக்கும் — ரஷ்யத் தலைவர்களுக்குமிடையில், இரு

(4-ம் பக்கம் பார்க்க)

மருத்துவக் கல்லூரி

காலவரையறையின்றி மூடப்படும் என எச்சரிக்கை?

மைசூர், அக் 22—

இங்குள்ள மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கடந்த 20-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.

மாணவர்கள் 25-ந் தேதிக்குள் வகுப்புகளுக்கு வராவிடில் கல்லூரியை காலவரையறையின்றி மூடிவிட பல்கலைக் கழகம் முடிவு செய்துள்ளதாம்.

என்ன காரணம்?

புதுடில்லி, அக். 21—

துணி உற்பத்தி குறித்து ஒரு புதிய முடிவுக்கு இந்திய அரசாங்கம் வந்துள்ளதாம்.

இரண்டாவது திட்ட இறுதியில் ஒரு நபருக்கு 17½ கெசம் வீதம் துணி கிடைப்பதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் குறிக்கோளை 1958-ம் ஆண்டிலேயே அடைந்துவிடுவதற்காக டில்லி சர்க்கார், ஆலைகள், கைத்தறிகள், அம்பர் சர்க்காக்கள், விசைத்தறிகள் ஆகியவைகளின் சக்தியை அதிகரிப்பதென முடிவு செய்துள்ளதாம்.

காங்கிரசை எதிர்த்து முஸ்லீம் லீக் தேர்தலில் போட்டியிடும்

சென்னை—

இந்திய முஸ்லீம் லீக் காங்கிரசிற்கு எதிராக வரப்போகும் பொதுத் தேர்தலில் குறிப்பிட்ட சில தொகுதிகளில் போட்டியிடுவதென முடிவு செய்திருக்கிறது.

முஸ்லீம் லீக் போட்டியிடாத தொகுதிகளில் சுயேச்சைகளையோ ஜனசங்கம், இந்து மகாசபை அல்லாத இதர கட்சியினரையோ ஆதரிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

லீகின் இலட்சியங்களுக்கும் நோக்கங்களுக்கும் முரண்படாத கட்சிகளுடன் கூட்டுச்சேரவோ, ஒப்பந்தம் செய்துகொள்ளவோ லீக் தலைவருக்குச் செயற்குழு அதிகாரமளித்திருப்பதாயும் தெரிய வருகிறது.

செயற்குழுக் கூட்டத்திற்கு இந்திய முஸ்லீம் லீக் தலைவர் எம் முகம்மது இஸ்மாயில் தலைமை தாங்கியிருக்கிறார்.

அதிக ஊதிய உயர்வு தராவிட்டால்......!

வேலை நிறுத்தம் துவங்குவர்

உற்பத்தியில் ரூ. 48 கோடி நஷ்டம் ஏற்படுமென அச்சம்?

டோக்கியோ, அக். 22—

ஜப்பானில் உள்ள நான்கு உருக்கு ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், அதிகப்படியான கூலி வேண்டும் என்று கோரியுள்ளனர்; அவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்காவிட்டால் வேலை நிறுத்தம் செய்வார்கள் என்றும், அப்படி வேலை நிறுத்தம் ஏற்பட்டால் உற்பத்தியில் ரூ 48 கோடி நஷ்டம் ஏற்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திறமைக்குப் 'போனஸ்' தரும் திட்டம் விரிவாகும்

கோரக்பூர், அக். 22—

சித்தரஞ்சன் எஞ்சின் உற்பத்திச்சாலையில் திறமைக்கு அளிக்கப்படும் 'போனஸ்', நல்ல வெற்றியைத் தந்துள்ளதாம்!

எனவே, இதை மேலும் விரிவாக்குவதற்காக இரயில்வே இலாகா யோசித்து வருகிறதாம்.

மீண்டும் சட்டசபை முன் மறியல்

40 தமிழரசுக் கழகத்தவர் கைது

சென்னை, அக். 23—

இன்று காலை 10-மணிக்கு சென்னை சட்டசபைமுன், தமிழரசுக் கழகத்தின் எல்லைக் கிளர்ச்சி நடைபெற்றது.

முதலில், அம்மாப்பேட்டை நகரசபைத் தலைவர் கண்ணப்பன் தலைமையில், 15 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

அடுத்து கவிஞர் கா. மு. ஷெரீப் தலைமையில் 25 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

நாளை மறியல் சின்ன அண்ணாமலை தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

டெலிபோன் அலுவலகத்தின் முன்னிலையில் 27 பேர் கைது

சென்னை, அக். 22—

மத்திய அரசாங்கத்தின் தொலைபேசி அலுவலகத்தின் முன் மறியல் செய்த 27 தமிழரசுக் கழகத் தொண்டர்களைப் போலீசார் கைது செய்தனர்.

நம் நாடு
சென்னை 23-10-'56 செவ்வாய்

நீர்மேல் எழுத்தா?

தமிழ்நாட்டின் வட எல்லைப் பிரச்சினை குறித்து இந்தியப் பேரரசின் சார்பில் உள்நாட்டு அமைச்சர் கூறியுள்ள பதில், தமிழர்களுக்கு ஏமாற்றமளிப்பதாக மட்டும் அமைந்திராது ஆத்திரமூட்டக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது. அதுவுமன்றி அப்பேரரசின் சார்பில் இனி தரப்படும் வாக்குறுதி எதிலும் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளாமல் இருக்க வேண்டும் என, அவ்வரசின் சார்பில் வலியவந்துத் தமிழ் மக்களை வேண்டிக் கொள்வது போலவும், அந்தப் பதில் அமைந்திருக்கிறது.

ஆந்திரத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள வடஎல்லை சிக்கலை, இனி உருவெடுக்க இருக்கின்ற 'சோனல் கவுன்சில்' என்ற மண்டலக் குழு தீர்க்க முயற்சிக்கட்டும்; அதனுல் தீர்க்கப் படாமல் போகுமானுல் அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்குரிய வேறு ஒரு ஏற்பாட்டைப் பின்னர் ஆராய்ந்து கொள்வோம் என்பதே பண்டித பந்த் அவர்களின் இன்றைய அறிவிப்பின் சாராம்சமாகும்.

வட எல்லை சிக்கலில் பரிகாரம் ஏற்படுத்துவதற்கு உள்நாட்டு அமைச்சர் பந்த் கூறும் இப்புதிய முறையில் உள்ள அபாயத்தை ஆராய்வதற்கு முன், இப்பிரச்சினையில் நேர்மையான பரிகாரம் காண எல்லைக் குழு நியமிக்கப்படும் என இந்தியப் பிரதமர் நேரு ஏற்கனவே தந்த வாக்குறுதி என்ன ஆயிற்று எனக் கண்டறிய வேண்டியது நியாயத்திலும் நியாயமாகும்.

1953-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தேதியன்று ஆந்திர மாகாணம் உருவெடுத்தது. அந்த நேரத்தில்தான் வடஎல்லை பிரச்சினையை, அதற்கென நியமிக்கப்பட இருக்கும் ஒரு எல்லைக் குழு தீர்த்துவைக்கும என இந்தியப் பேரரசின் சார்பில் இந்தியப் பிரதமர் நேரு பெருமான வாக்களித்தார்.

இந்தியப் பிரதமர் நேருவால் அளிக்கப்பட்ட வாக்குறுதி இன்றளவும் திரும்பப்பெறப் படாமல்தான் இருந்து வருகிறது. அதுபோன்றே, வட எல்லை சிக்கலும் இன்றளவும் பைசல் ஆகாமல்தான் இருந்து வருகிறது.

மூன்றுண்டுகளுக்குமுன்னர் ஆந்திர மாகாணத்தை உருவாக்கியபொழுதே, வட எல்லையையும் இந்தியப் பேரரசு அன்றே வரையறுத்துவிட்டிருக்கவேண்டும். அதை அப்பொழுது செய்வதிலிருந்துத் தடுப்பதற்கு அல்லது காலம் தாழ்த்துவதற்கு இந்தியப் பேரரசிற்கு நியாயமான காரணம் எதுவும் இருந்ததாகக் கொள்வதற்கில்லை.

தம்மால் செய்யக்கூடிய ஒன்றை, அதற்கான தடை எதுவும் இல்லாதிருக்கின்ற நிலையிலும் இந்தியப் பேரரசு செய்யாமல் காலம் தாழ்த்தியதை, ஏதோ அறியாமல் அப்பேரரசு செய்திருக்கக்கூடும் என எவராலும் சுலபமாக எண்ணிவிட முடியாது. ஏதோ ஒன்றை எதிர்பார்த்துத்தான், அந்த நேரத்திலேயே, இருசாராருக்கும் மனக்கசப்பு ஏற்படாத நிலையிலேயே, வேண்டுமென்றே எல்லையை வரையறுப்புச் செய்யாது இந்தியப் பேரரசு இருந்திருக்க வேண்டும் என யூகிக்க வேண்டியதாக இருக்கிறது.

ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் பிணக்கு எதுவும் ஏற்படாது இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை இந்தியப் பேரரசிற்கு இயல்பாகவே அமைந்திருக்கிறது. மூன்றுண்டுக் காலத்திற்கு முன்னரே வடஎல்லையை இந்தியப் பேரரசு வரையறுத்து விட்டிருந்தால், எல்லை விஷயமாக ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் இன்று காணப்பெறும் சிறு மனக்கசப்பும் தோன்றுவதற்குத் துளியும் சந்தர்ப்பமே ஏற்பட்டிருக்க நியாயமிருந்திருக்காது.

இரு சாராரும் ஒப்புக்கொள் ளத்தக்க வகையில் அன்றே வடஎல்லை வரையறுக்கப்பட்டிருந்தால், ஆந்திரர்கள் மீது ஆத்திரம் கொள்ளவேண்டிய அவசியம் தமிழர்களுக்கு இருந்திருக்காது. அதுவுமன்றி, வட எல்லை நிர்ணயிப்பு விஷயத்தில் பிடிவாதம் பேச வேண்டிய போக்கு ஆந்திரர்களிடம் தோன்றி இருக்காது.

வடஎல்லை விவகாரத்தில் தீர்வு காணவேண்டிய தனது கடமையை உடனடியாகச் செய்யாது காலந்தாழ்த்துவதினுல், ஆந்திரருக்கும் தமிழர்களுக்கும இடையில் உட்பகை உருவாவது எதிர்பார்க்கக் கூடியதாகும் என்ற உண்மை இந்தியப் பேரரசிற்குத் தெரியாது இருக்க நியாயமில்லை.

வடஎல்லையை இப்பொழுதே நிர்ணயிக்கத் தவறிவிடும் பட்சத்தில் விளையக்கூடிய விளைவு குறித்து நன்கு தெரிந்துகொண்டிருக்கிற இந்தியப் பேரரசு, வேண்டுமென்றே அத்தவறை இழைக்கத் துணிந்திருக்கிறது என்ருல், எல்லை விஷயமாக ஆந்திரர்களும் தமிழர்களும் பகைபட்டுக் கிடப்பதே இந்தியப் பேரரசின் விருப்பமாகும் என நாம் குற்றங்கூறினுல், அது எவ்வாறு பொருந்தாமல் போகக்கூடும்?

எனவே, ஆந்திரர்களும் தமிழர்களும் பகை பட்டுக்கிடப்பதில் ஏதோ ஒரு இலாபத்தை எதிர்பார்த்துத்தான், ஆந்திர மாகாணம் பிரிந்தபோதே சிக்கறுத்து இருக்கவேண்டிய வட எல்லைப் பிரச்சினையை இது வரை வளரவிட்டுக் கொண்டிருக்கிறது என, இந்தியப் பேரரசின் மீது நாம் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டுகிறோம். இப்பொழுது உள்நாட்டு அமைச்சர் பந்த் கூறும் பரிகார முறையும், மேல் குறித்துள்ள நமது குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் தன்மையிலேயே அமைந்திருக்கிறது.

தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் கொஞ்ச காலமாக உறவு கெட்டிருக்கிறது என்பது நாடறிந்த உண்மையாகும். அவர்களும் இடம் பெற்றுள்ள மண்டலக் குழு, வட எல்லைப் பிரச்சினையைப் பைசல் செய்ய எடுத்துக்கொள்ளும் பட்சத்தில், தமிழர்கள் ஏற்கும் வகையில் அதன் முடிவு இருக்காது என்பதற்கு ஆருடம் கேட்கத் தேவையே இல்லை. தமிழர்களுக்குப் பாதகமாகத்தான் அம்முடிவு அமைந்திருக்கும் என்பதை இப்பொழுதே உறுதி செய்துகொள்ளலாம்.

கேரளத்தில் இணைக்கப்பட்டுள்ள நியாயமாகத் தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட வேண்டிய தேவிகுளம் பீர்மேடு பகுதிகளைக் கேட்டதினுல் கேரளர்களுக்குத் தமிழ் மக்கள் மீது ஒருவகை விரோதம் இருந்து வருகிறது. வடஎல்லை விவகாரமாகத் தமிழர்கள்மீது ஆந்திரர்கள் வெறுப்படைந்து இருக்கிருர்கள்.

தற்சமயம் தமிழ் மக்கள் மீது பகை கொண்டுள்ள மலையாளிகளும் ஆந்திரர்களும் இடம் பெற்றுள்ள மண்டலக் குழுவில்; வடஎல்லை விவகாரமாகத் தமிழ்நாட்டிற்குநேர்மையான நீதி கிடைக்கக்கூடும் என எவரும் எதிர்பார்க்க முடியாது.

வடஎல்லை பிரச்சினைக்கு மண்டலக் குழு மூலம் தமிழ் மக்கள் நியாயம் பெறுவது ஒருக்காலும் முடியப் போவதில்லை என நாம் மட்டுமே முடிவு கட்டுகிறோம் என்பதில்லை. ஏற்பட இருக்கும் இம்முடிவை இந்தியப் பேரரசும் எதிர்பார்த்தே இருக்கிறது என்ற உண்மை, மண்டலக் குழு தீர்த்துவைக்கத் தவறும் பட்சத்தில் வேறு ஏற்பாட்டை அப்பொழுது ஆராயலாம் என உள்நாட்டு அமைச்சர் பந்த், சிக்கலுக்குத் தீர்வு காண மாற்று முறையை முன்கூட்டி குறித்திருப்பதின் மூலம் வெட்டவெளிச்சமாகிறது.

மண்டலக் குழுவில் தமிழர்கள்மீது தவருக ஆத்திரம் கொண்டுள்ள மலையாளிகளும் ஆந்திரர்களும் இடம்பெற்றிருப்பது போதாதென்று, தமிழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டிய கடமை இருந்தும், அக் கடமையை நிறைவேற்ருது வேண்டுமென்றே காலம் தாழ்த்திவரும் இந்தியப் பேரரசின் பிரதிநிதியும் அம்மண்டலக் குழுவில் இடம் பெற இருக்கிருர். வடஎல்லை சிக்கல் தீருவது குறித்துக் கவலையற்று இருக்கிற ஒருவரும், தமிழர்களிடம பகைகொண்டு இருக்கிற இருவரும் இடம் பெற்றுள்ள ஒரு மண்டலக் குழுவில், தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்பதை எந்த அறிவுள்ளவனும் நம்ப முன்வர மாட்டான்.

உடன்பிறந்த பாசத்தோடு உறவு கலந்து வாழவேண்டிய ஓர் இன மக்களிடை, தவறுதலாக ஏற்பட்டுள மனமாச்சரியம், மண்டலக் குழுவில் வெட்டுக் குத்துப் பகையாக வளர்த்துவிடக்கூடும். இதுதான் உள்நாட்டு அமைச்சர் பந்த் கூறும் மண்டலக் குழு ஏற்பாட்டின் பயங்கர விளைவாக இருக்கப்போகிறது. நிற்க,

வட எல்லை சிக்கலில் முடிவு காண எல்லைக் குழு நியமிக்கப் போவதாக இந்தியப் பிரதமர் நேரு முன்னர் வாக்குறுதி அளித்தார். அவ்வாக்குறுதி திரும்பப் பெருது இருக்கும் நிலையிலேயே, உள்நாட்டு அமைச்சர் பந்த் வேறு ஒரு பரிகாரம் கூற முன்வந்து இருக்கிருர்.

இருவரும் இந்தியப் பேரரசின் சார்பில்தான் பேசுகிறவர்களாக இருக்கிருர்கள்! இருவர் போக்கிலும உள்ள முரண்பாடு நமக்கு விளக்கமாகத் தெரிகிறது. ஏன் இத்தகு முரண்பாடு எனக் கேட்கவும் நமக்குத் தோன்றுகிறது. ஆனுல், சிலரோ இத்தகு முரண்பாட்டில்தான் இந்தியப் பேரரசின் செயல் திறம்கண்டு பூரித்துப் போகிருர்கள்!

வடஎல்லை சிக்கலில் பரிகாரம் காண ஒரு எல்லைக் குழு நியமிக்கப் போவதாக இந்தியப் பிரதமர் நேரு தந்திருந்த வாக்குறுதி, இன்று நீர்மேல் எழுத்தாகிறது! இது எந்த அளவு காந்திய பாரம்பரியத்தில் தொடர்பு கொண்டிருக்கிறதோ, நாமறியோம்.

ரூ. 289 இலட்சம் செலவில் சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டம்

20,000 ஏகர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்

திருவண்ணுமலை தாலுகாவில் ரூ. 289 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிற சாத்தனுர் அணைக்கட்டுத் திட்டத்தின்மூலம், சென்னை மாகிலத்தில் சுமார் 20,000 ஏகர் கிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்.

பொன்னியாறுமீது கட்டப்படுகிற இந்த அணை, சாத்தனுர் கிராமத்திலிருந்து சுமார் நான்கு மைல் தென்மேற்கிலுள்ள மலை இடுக்கில் கட்டப்படும்.

பொன்னியாறு, மைசூர் மாகிலத்தில் சென்னகேசவமலையில் உற்பத்தியாகிறது; 53 மைல் மைசூரில் ஓடியபின் அது, சென்னை மாகிலத்தில் புகுந்து, சேலம், வடஆற்காடு, தென்ஆற்காடு மாவட்டங்கள் வழியாகப் பாய்ந்து கடலில் விழுகிறது.

பொன்னியாறு 5,000 சதுர மைல் பிரதேசத்தில் பாய்கிறது. தென்மேற்கு, வடகிழக்குப் பருவ மழைகளால் அதில் தண்ணீர் கிரம்புகிறது. அந்நதிமீது சேலம் மாவட்டத்தில் அலியாலம், நெடுங்கல்; தென் ஆற்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூர், எல்லீஸ்சத்திரம் ஆகியவிடங்களில் நான்கு முக்கிய அணைக்கட்டுகள் இருக்கின்றன.

புள்ளி விவரங்கள்

சாத்தனுர் அணையின் நீளம் 2,583 அடி; அதன் உச்ச உயரம் 147 அடி. இதுபோக 20 அடி உயரமுள்ள 400 அடி அணைக்கட்டும், 22 மைல் நீளமுள்ள கால்வாய்த் திட்டமும் இருக்கும்.

அணை வேலை சிக்கனமாகவும், உள்ளூர் ஆட்களுக்கு வேலை வசதி அளிப்பதாகவும் இருக்கும் பொருட்டு, இயந்திர சக்தியும் மனித சக்தியும் பொருத்தமான முறையில் கலந்து உபயோகிக்கப்படும்.

கால்வாய்த் திட்டம்

தடுப்பு அணைக்கட்டின் இடது புறத்திலிருந்து மதகு வழியாகக் கால்வாயில் தண்ணீர் விடப்படும். வினுடிக்கு 400 கன அடி வீதம் தண்ணீர் பாயும். பிரதான கால்வாய் 22 மைல் நீளமுள்ளது. மொத்தம் 50 மைல் நீளமுள்ள உப கால்வாய்கள் இருக்கும். கால்வாய்களின் முற்பகுதியில் கரடுமுரடான பாறைகள் அடித்தளமாக இருக்கும். பிறகு தண்ணீர் இறங்கிவிடக்கூடிய இலேசான தரை இருக்கும். அதனுல் கால்வாயில் எட்டாவது மைல்வரை காங்க்ரீட்டால் தளம் பூசப்படும். தண்ணீர் பூமியில் இறங்காமல் தடுக்கப்படும்.

அணை பூர்த்தியானபின், 8,000 டன் அதிக அரிசி விளைவதற்குப் பாசனவசதி கிடைக்கும்.

இத்திட்டத்தால் தண்ணீர்ப் பஞ்சமுள்ள வடஆற்காடு, தென்னுற்காடு மாவட்டங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும்; அங்குள்ள மக்களுக்கு அதிகவேலை வாய்ப்பும் வருமானமும் கிடைக்கும்.

'இன்னும் ஏழ்மை இருக்கிறது'!

'நீதி மன்ற நடவடிக்கைகள் கேலிக்கூத்தாக உள்ளன'!

செஞ்சீனு பற்றி டேவிட் மார்ஷல்

சிங்கப்பூர் சுதந்திரத்திற்காகப் போராடிவரும் முன்னுள் முதன் மந்திரி டேவிட் மார்ஷல், அண்மையில் செஞ்சீனுவில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, அந்த நாட்டைப் பற்றிய தனது கருத்தை ஹாங்காங் பல்கலைக் கழகத்தில், பேசும்போது கீழ்க்கண்டவாறு வெளியிட்டுள்ளார் :—

"உலகில் வேறெங்கும் இல்லாத அளவு வாழ்க்கைத் தொல்லைகள் சீனுவில் இன்றும் கிலவுகின்றன; ஆனுல் 5 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைப்போல மக்கள் கூட்டம் கூட்டமாகப் பட்டினி கிடக்கவில்லை. இப்போதும் வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிடவில்லை. கிராமப்புறங்களில் இன்னும் ஏழ்மை நிலவத்தான் செய்கிறது.

"சட்ட, நீதி மன்ற அமைப்புகள் திருப்திகரமாக இல்லை.

"நீதிபதிகள் அரசியல்வாதிகளுடன் ஒன்றியவர்களாயிருக்கின்றனர்; வேறுபாடே தெரியவில்லை.

"பலமுறை வேண்டிக் கேட்டுக்கொண்ட பின், சில நீதி மன்ற நடவடிக்கைகளைக் கவனிக்க அனுமதித்தார்கள்; அவை வெறும் கேலிக்கூத்தாக இருந்தன.

"ரஷ்யாவிற்கு, செஞ்சீனுவில் செல்வாக்கு இருக்கிறது; ஆனுல் ரஷ்யாவின் ஆதிக்கம் இருக்கிறது எனக் கூறமுடியாது."

சாத்தூரில் எண்ணெய் ஊற்றுகள்

சாத்தூரில் எண்ணெய் ஊற்றுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவாம்!

வைப்பாற்றில் பாலம் கட்டும் பொருட்டு குழி தோண்டிக்கொண்டிருக்கையில் இந்த ஊற்று கண்டுபிடிக்கப்பட்டதாம்.

மூன்று ஊற்றுகள் தென்பட்டதாகவும், இவற்றில் எண்ணெய் போன்ற திராவகம் காணப்படுவதாகவும், இந்தத் திராவகம் தற்போது சோதனை செய்யப்பட்டு வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ளவர்களின் புனர்வாழ்விப்பு சம்பந்தமான 16 திட்டங்களுக்கு யூனியன் சர்க்கார், 1956 செப்டம்பர் மாதத்தில் அனுமதியளித்திருக்கின்றனர்; ரூ. 3 கோடி செலவு பிடிக்கக்கூடிய இத்திட்டங்கள் மூலம் சுமார் 22,000 குடும்பங்கள் பயனடையும்.

இந்தியாவில் சைக்கிள் டியூபுகளின் உற்பத்தி 1954-ல்55,76,991 ஆக இருந்தது — 1955-ல் 55,80,498 ஆக அதிகரித்தது!

புதுவை ஆலைத் தொழிலாளர் உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

முதலாளிமார் ஆணவப்போக்கை முறியடிக்க புதுவை தி. மு. கழகம் வேண்டுகோள்

புதுச்சேரி, அக். 22—

புதுவையிலுள்ள 'ரோடியர்' ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் அனைவரும் கடந்த 12 தினங்களாக உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

கடந்த 8-ந் தேதியன்று, அவ்வாலை நிர்வாகிகள், தங்களுக்குச் சாதகமான தனிப்பட்ட நபர்களைக் கொண்டு அவர்களுக்குப் பணமும் பாதுகாப்பும் கொடுத்து ஒருவர் 4 தறி வீதம் இயக்குமாறு செய்து வருவதை எதிர்த்தே தொழிலாளர்கள் மேற்படி வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருக்கின்றனர்.

1954-ம் ஆண்டுக்கு முன்னால், அவ்வாலையில் நபர் ஒருவர் ஒரு தறி வீதம் இயக்க வேண்டுமென்ற அமுல் நடத்தப்பட்டது. அதன் பின்னர், 1954ல் ஏற்பட்ட சிற்சில குழப்பங்களின் விளைவாக, ஆலை நிர்வாகத்தினர் நபர் ஒன்றுக்கு 2 தறி என்ற கட்டாய முறையை ஏற்படுத்தினர். அதன் விளைவாகப் புதுவையில் 1,200 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

இரண்டு தறிகளுக்கு ஒரு நபர் என்கின்ற இந்த முறை இரண்டாண்டுகளுக்குக்கட்டாயமாக அமுலில் இருந்துவந்தது. ஆனால் இப்போது அந்த முறையை மாற்றி, நபர் ஒருவர் 4 தறி வீதம் இயக்கவேண்டும் என்று திட்டம் தீட்டியிருக்கின்றனர் நிர்வாகிகள்.

இந்த ஆலை முதலாளிகளின் எண்ணம் நிறைவேறுமானால் புதுவைப் பகுதியில் மேலும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டு அவதியுறும் என்பதை அப்பகுதி சகல தொழிற் சங்கங்களும் உணர்ந்து, அதன் விளைவாகக் கடந்த 12 தினங்களாகத் தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர். அரசாங்கத்தவரும் தொழிலாளர்கள் கோரிக்கைக்கு ஆதரவு தந்து, பிரச்சினையை ஆராய்வதாகத் தெரிகிறது.

முதலாளிகளின் இத்தகுப் போக்கை முறியடிக்கத் தன் முழு ஆதரவைத் தருவதாகவும், இதற்கான பணிகளில் தொழிற் சங்கங்கள் அனைத்தும் கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு உழைக்குமாறு கேட்டுக்கொண்டும், முதலாளிகளின் கொடுமையை சர்க்கார் நன்குத் தெரிந்திருந்தும்சரியான முறையில் இன்னும் தீர்வு காணாமல் சர்க்கார் இருப்பது ஜனநாயக அரசாங்கத்திற்கு அழகல்ல என்பதைத் தெரிவித்துக்கொண்டும் புதுவை முதலியார்பேட்டை தி. மு. கழகத்தவர் துண்டு அறிக்கைமூலம் வெளியிட்டிருக்கின்றனர். (ந. கி.)

கே.வி.கே.சாமி மறைவு

சென்னை பி. அண்டு. சி. ஆலைத் தொழிலாளர் அனுதாபம்

14—10—56 பகல் 2 மணிக்கு சென்னை பி. அண்டு சி. ஆலைத் தி. மு. கழகத் தேர்தல் நிதிக் குழு உறுப்பினர் கூட்டம் தோழர் கே சுப்பிரமணி தலைமையில் நடைபெற்றபோது தோழர் கே வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்டு மறைந்தமை குறித்தும், விருதுநகர் திரு சங்கரலிங்கம் அவர்கள் உண்ணாவிரதமிருந்து மறைவுற்றமை குறித்தும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் நிதிக் குழுவின் இடைக்கால வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன.

★

உதகை நகராண்மை கழக அனுதாபத் தீர்மானம்

10—10—56ல், உதகை நகராண்மைக் கழகக் கூட்டத்தின் போது தோழர் கே. வி. கே. சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை சுயேச்சை அபேட்சகர் திரு. இராசு அவர்கள் முன்மொழிந்தார். தீர்மானத்தை காங்கிரஸ் உறுப்பினர் திரு சுப்பிரமணியம் வழி மொழிந்தார். தீர்மானம் ஏகமனதாக நிறையேற்றப்பட்டது.

சென்னை-பச்சையப்பன் கல்லூரி:

9—10—56 மாலை $4\frac{1}{2}$ மணி அளவில் சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர் கிளையினர் சார்பில் தோழர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை-திருவொற்றியூர் :

9—10—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு சென்னை - திருவொற்றியூரிலுள்ள இம்பீரியல் டொபாக்கோ கம்பெனித் தொழிலாளர் சங்கச் செயற்குழுக் கூட்டம் தோழர் மா. வெ. நாராயணசாமி தலைமையில் நடைபெற்றபோது அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஒரு நிமிட நேரம் அனைவரும் எழுந்து மௌனமாக நின்று இறுதி மரியாதை தெரிவித்துக் கொண்டனர்.

சென்னை—ஆல்தோட்டம்

13-10-56 மாலை 6 மணிக்கு சென்னை ஆல்தோட்டம் இளைஞர் வளர்ச்சி மன்றச் சார்பில் தோழர் த. செகனுதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு நிமிடம் மௌனம் மேற்கொள்ளப்பட்டது.

ஆலை தொழிலாளர்களுக்கு ரூ. 61 இலட்சம் போனஸ்

கோவை, அக். 20—

கோவை, சேலம், பழனி, ஆகிய இடங்களிலுள்ள 44 நூற்பு ஆலைகளில் பணியாற்றும் 50,000-தொழிலாளர்கள் 1955-ம் ஆண்டிற்குப் போனசாக ரூ 61 இலட்சம் பெறுவர்.

21 ஆலைகள் ஒவ்வொரு தொழிலாளருக்கும் அவர்களது 6 மாத அடிப்படைச் சம்பளத்தைப்போனசாகத் தரும் ; மற்ற ஆலைகள் 2 - முதல் 5 மாத சம்பளத்தைத் தரும்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி :

சென்னை மாவட்டத்தில் தேர்தல் ஆய்வுக்குழுவின் விசாரணை

28—10—56 ஞாயிறு காலை 'அறிவக'த்தில் நடைபெறும்

சென்னை மாநிலத்திலுள்ள எல்லாத் தொகுதிகளின் தேர்தல் சூழ்நிலையை அறியத் தேர்தல் ஆய்வுக் குழுவினர் 28-10-56 காலை 9-மணிக்கு, இராயபுரம் 'அறிவக'த்தில் தங்களின் பணியைத் துவக்குவார்கள்.

விசாரணை கீழ்க்கண்ட வரிசைப்படி நடைபெறும்.

ஒவ்வொரு தொகுதியிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், தேர்தல் சூழ்நிலையை தெரிவிக்கக்கூடிய முக்கியஸ்தர்கள் அனைவரும் ஆய்வுக் குழுவின் முன் தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஒவ்வொரு தொகுதியிலிருந்தும்வரும் தோழர்கள் தேர்தலைப் பற்றிய விவரம் தருவதில் ஒத்த கருத்துடையவர்களாயிருப்பின் சேர்ந்தோ, இல்லையெனில் தனித்தனியாகவோ ஆய்வுக் குழுவின்முன் தங்களின் எண்ணத்தைத் தெரிவிக்கலாம். ஆய்வுக்குழுவின் பணி இனிது நிறைவேறும் வகையில், அந்தந்தத் தொகுதியிலிருந்து வரும் தோழர்கள், தேர்தல் சூழ்நிலை பற்றிய விவரங்களை அறிந்து வருமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

★

1. வண்ணைத் தொகுதி :
புது வண்ணை, இராயபுரம், சிங்காரத்தோட்டம், சஞ்சீவிராயன்பேட்டை வட்டங்கள்.

2. ஆர்பர் தொகுதி :
ஏழுகிணறு, அம்மன்கோயில், முத்தியாலுப்பேட்டை, ஆர்பர், கச்சாலீஸ்வரர் கொத்தவால்சாவடி, சவுக்கார் பேட்டை, போர்ட்செயின்ட் ஜியார்ஜ் வட்டங்கள்.

3. பேசின்பிரிட்ஜ் தொகுதி:
கொருக்குப்பேட்டை, பேசின்பிரிட்ஜ், பெத்துநாய்க்கன்பேட்டை, டிரிவிலியன் பேசின், எடப்பாளையம் வட்டங்கள்.

4. பெரம்பூர் தொகுதி :
வியாசர்பாடி, சூளை, புளியந்தோப்பு, பெரம்பூர் பாரக்ஸ், செம்பியம, அயன்புரம், புரசைவாக்கம், குயப்பேட்டை வட்டங்கள்.

5. ஆயிரம்விளக்குதொகுதி
கீழ்ப்பாக்கம், ஆயிரம் விளக்கு, நுங்கம்பாக்கம், இராயபேட்டை, புதுப்பாக்கம் வட்டங்கள்.

6. எழும்பூர் தொகுதி :
வேப்பேரி, பெரியமெட்டு, பார்க் டவுன், நேப்பியர் பார்க், சிந்தாதிரிப்பேட்டை, கோமளீஸ்வரன்பேட்டை, எழும்பூர் வட்டங்கள்.

7. திருவல்லிக்கேணி தொகுதி :
திருவட்டீஸ்வரன் பேட்டை, சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, ஜாமபஜார், மீர்சாகிப்பேட்டை வட்டங்கள்.

8. மயிலாப்பூர் தொகுதி :
மயிலை வடக்கு, மயிலை தெற்கு, தேனாம்பேட்டை, அடையாறு வட்டங்கள்.

9. தியாகராயநகர் தொகுதி:
கோடம்பாக்கம், தியாகராய நகர் வடக்கு, தியாகராய நகர் தெற்கு, சைதாப்பேட்டை, கிண்டி வட்டங்கள்.

★

28—10—56 காலை 9 மணிக்குச் சரியாய் ஆய்வுக் குழுவின் பணி துவங்கப்படுமாதலால், அந்தந்தத் தொகுதியிலுள்ள தோழர்கள் குறித்த நேரத்திற்குள் 'அறிவகம்' வருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

'சுயநலவாதிகளும் துரோகிகளும் நிறைந்த கூடாரமாகியது காங்கிரஸ்'

'உண்மை உழைப்பாளரும் ஏழைகளும் இருக்க இலாயக்கற்றதாகிவிட்டது'

தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் காங்கிரசின் இன்றைய நிலைபற்றிக் காந்தீயவாதி

செயங்கொண்டம் அக் 20—

"இன்று காங்கிரசில் நாணயமானவர்கள் எவரும் இல்லை சுயநலச் சூதாடிகளும், தியாகிகளிடமே இலஞ்சம் வாங்கும் துரோகிகளும் நிறைந்த கூடாரமாகிவிட்டது காங்கிரஸ்! உத்தமர் காந்தியார் அரை ஆடையுடன் செல்லுமிடமெல்லாம் குடிசையிலேயே தங்கினார் — தங்க விரும்பினார். 'அவரது பாதையைத்தான் பின்பற்றுகிறோம்' என்று கூறிக்கொண்டு இன்று காங்கிரசில் இருக்கும் போலி வேடதாரிகள், மாடமாளிகைகளிலும் கூடகோபுரங்களிலும், பெரிய பங்களாக்களிலும் எல்லா வசதிகளையும் பெற்று சுகவாழ்வு வாழ்கிறார்கள். இந்தக் காங்கிரஸ்காரர்கள் செய்கின்ற காரியங்களையெல்லாம் பார்க்கும்போது மனம் பதைக்கிறது; உள்ளம் கொதிக்கிறது."

இவ்வாறு, கடந்த 15-ந்தேதியன்று செயங்கொண்டத்தில் தோழர் ஆ. மெத்துசலா தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட 30 ஆண்டுக்கால தீவிர காந்தீயவாதியும், ஐந்து ஏகர் தியாகியுமான திரு. அ. அழகேசம் என்ற காங்கிரஸ்காரர், காங்கிரஸ் கட்சியினரின் போக்கில் ஏற்பட்டுள்ள ஒழுங்கற்ற முறைகண்டு பொறுது மனம் வெதும்பிப் பேசியிருக்கிறார்.

மேலும் அவர் கூறினார்:—

"கொஞ்சம் குமுறும் காரியங்களையே காங்கிரஸ் இன்று செய்து வருகிறது. காங்கிரசில் நல்ல உழைப்பாளர்களுக்கு வேலையே இல்லை. ஏழைகளுக்கு அங்கு இடமே இல்லை தியாகிகளுக்கு நில மானியம் அளித்ததை நினைத்துப் பார்த்தால் வேதனையாக இருக்கிறது. இலஞ்சம் கொடுப்பவர்களுக்கு அயன் நஞ்சை நிலமும, தராதவர்களுக்கு காடும் கரம்பும் மானியமாகக் கொடுத்த இந்தக் காங்கிரசின் செய்கை நீதியா? நேர்மையானதா?

"நாங்களெல்லாம் கதர்த் துணி அணிந்து தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, கதருக்கே ஒரு தனி மதிப்பு இருந்தது. ஆனால் இன்று? சாராயக்காரர்களும், இலஞ்சம் வாங்கும் அயோக்கியர்களும் பதவிப் பித்தர்களுமே கதரைக் கட்டுகின்றனர். மிட்டா மிராசுகளும் தான் அங்கு முதலிடம் வகிக்கின்றனர்"

கூட்டத் துவக்கத்தில் தோழியர் கருணாநிதி இயக்கப்பண் பாடினார். தோழர்கள் அ. இளையகம், கோ. செப்பெருமாள், க. க. இராமச்சந்திரன், முருகேசன், சிறுமி இளங்கோ ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

கூட்ட இறுதியில் தோழர் கே. வி கே. சாமி, சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ந. கி.)

புதிய முதன் மந்திரிகள் தேர்வு

பெங்களூர், அக். 21—

நவம்பர் முதல்தேதி அமையவிருக்கும் புதிய மைசூர் மாநிலத்தின் முதன் மந்திரி பதவிக்கு, பிரதேசக் காங்கிரசின் முன்னாள் தலைவரும், மக்களவை உறுப்பினருமான எஸ். நிஜலிங்கப்பா அவர்கள் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியினரால் ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இப்போதைய முதன் மந்திரி கதிலால் மஞ்சப்பா முன்மொழிய, வீரண்ண கௌடா வழிமொழிய, தோழர் மாதவன் நாயர் (காங்கிரஸ் செயலாளர்) தலைமையில் நிஜலிங்கப்பாவின் தேர்தல் நடைபெற்றிருக்கிறது.

பலரும் புதிய தலைவரைப் பாராட்டிப் பேசியிருக்கின்றனர்.

* * *

கர்னூல், அக் 21—

இப்போது ஆந்திராவின் உதவி முதன்மந்திரியாயிருக்கும் என். சஞ்சீவி ரெட்டி, புதிய ஆந்திர பிரதேச மாநிலத்தின் முதன் மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஸ்ரீமன் நாராயணன் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் கூட்டத்தில் முதன் மந்திரி கோபால ரெட்டி முன்மொழிய, ஐதராபாத் முதன்மந்திரி டாக்டர் இராமகிருஷ்ண ராவ் வழிமொழிய ஒருமனதாக சஞ்சீவி ரெட்டி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இரகசியத் தேர்தல்

கட்சிக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக நடைபெற்ற அதிகாரம் பற்றற்றக்கூட்டத்தில், இரகசியத் தேர்தல் நடைபெற்றதாகவும், அதில் சஞ்சீவி ரெட்டிக்கு அதிகமான வாக்குகள் கிடைத்ததாகவும், அதனாலேயே கட்சிக் கூட்டத்தில் கோபாலர் போட்டியிடவில்லை என்றும் கூறப்படுகிறது. இருவரும் பெற்ற வாக்கு விவரங்கள் வெளியிடப்படவில்லை.

புதிய தலைவரை, கோபால ரெட்டி, பிரகாசம் உள்ளிட்ட பலர் பாராட்டிப் பேசியிருக்கின்றனர்.

தேர்தல் நிதி

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் கிழக்கு இராசபாளையம் தோழர் தங்கவேலு அவர்கள் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 1 அன்பளித்தார்.

மார்ச் முற்பகுதியில் பொதுத் தேர்தலாம்!

மதுரை, அக். 21—

"பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு நிச்சயம் மார்ச் முற்பகுதியில் நடைபெறும்"

என்று இந்திய அரசாங்க இரயில்வே அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி காங்கிரஸ் ஊழியர் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"அதிகார பீடத்தில் இருக்கிறோம் என்ற 'மமதை' காங்கிரஸ்காரர்களுக்கு ஏற்படக்கூடாது; அதற்கு மாறாகத் தொண்டு உணர்ச்சி ஏற்படவேண்டும்."

ஆய்வுக் குழு நிகழ்ச்சிகள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கழகச் செயலாளர் கைத்தறி ஆடைகளை அணிவித்து வரவேற்ருர்.

பின்னர் பொதுச்செயலாளர் கழகக் கொள்கையை விளக்கிப் பேசியதோடு, தமது சகத் தோழர்களின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார்.

இந்த வரவேற்புக் கூட்டத்தில் ஏரானமான கேரளப் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

பின்னர் பாலராமபுரம் கைத்தறி கூட்டுறவு வியாபார நிலையத்திற்குப் பொதுச்செயலாளரும், மற்றத் தோழர்களும் சென்று பார்வையிட்டனர். வியாபார நிலையத்தின் நிர்வாகிகள்வரவேற்று உபசரித்தனர்.

திருவனந்தபுரத்தில்:

பொதுச்செயலாளரும் அவர் தம் குழுவினரும் 20—10—56 பகல் 12-30 மணிக்கு திருவனந்தபுரம் வந்து சேர்ந்தனர். கழகத் தோழர்கள் மிகுந்த உற்சாகத்திற்கிடையே வரவேற்றனர்.

பின்னர் கேரளப் பிரதேச தி. மு கழக அமைப்புக் கூட்டம், திருவனந்தபுரம் கடற்கரை அடுத்துள்ள கட்டிடத்தில் நடைபெற்றது.

நகரச் செயலாளர் சுபேர், பொதுச்செயலாளரும் அவர்தம் குழுவினரும் தங்களின் வேண்டுகோளுக்கிணங்கி வருகை தந்தது குறித்து நன்றி அறிவித்து வரவேற்ருர்.

நாஞ்சில் மாவட்டம் தமிழகத்துடன் இணைந்துவிட்டதால் இனி கேரளப் பிரதேசத்திற்கென்று மத்தியக் கமிட்டி ஒன்று நிறுவ வேண்டுமென்றும், அதற்கான வழி வகைகளைத் தெரிவிக்குமாறும் பொதுச்செயலாளரைக் கேட்டுக்கொண்டார்.

கேரளத்தில் பல பகுதிகளிலிருந்தும் கிளைகளின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தங்கள் தங்கள் கருத்துக்களை அறிவித்தனர்.

இறுதியாகப் பொதுச்செயலாளர் அவர்களின் யோசனைப்படி கேரளத்திலுள்ள ஒவ்வொரு கிளையிலிருந்தும் இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து கேரளப் பிரதேச தி. மு. கழகத்தை அமைத்துக் கொள்வதென்றும், இப்பிரதேசக் கமிட்டி மாவட்டக் கிளைக்குள்ள உரிமைகளுடன் இயங்குதல் வேண்டுமென்றும், அந்த அடிப்படையில் தலைமைக் கழகத்துடன் தொடர்பு கொண்டு பணியாற்றி வருவதென்றும், கேரளப் பிரதேசக் கமிட்டியை மேற்கண்ட திட்டப்படி நிறுவ தற்காலிகமாக ஒரு அமைப்பாளரை நியமித்துக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பின்னர் கழகப் பிரதிநிதிகள் கேட்ட சில விபரங்களுக்குப் பொதுச்செயலாளரும், மற்றத் தோழர்களும் விளக்கம் அளித்தனர்.

இறுதியாக வந்திருந்த பிரதிநிதிகளுக்கும், பொதுச்செயலாளருக்கும், அவர்தம் குழுவினருக்கும் தோழர் சுபேர் நன்றியறிவித்தார். இக்கூட்டம் மாலை 4 மணிக்கு முடிவுற்றது.

மாணவர் கழக அலுவலகத்தில்:

மாலை 5 மணிக்கு திருவனந்தபுரம் தி. மா. மு. கழக அலுவலகத்திற்குப் பொதுச்செயலாளரும் அவர்தம் குழுவினரும் வருகை தந்தனர். மாணவத் தோழர்களுடன் இயக்கப் பணி குறித்துச் சிறிதுநேரம் உரையாடிவிட்டு, அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டனர். மாணவத்தோழர்களும் திருவனந்தபுரம் தி. மு. கழகக் கிளையினரும் தோழர் சி. மனோகரன், சுபேர் ஆகியோரும் உடனிருந்து வழி அனுப்பினர்.

★

காரைக்குடியில் தேர்தல் ஆய்வுக் குழு

21—10—56 இரவு 7 மணிக்குத் தேர்தல் ஆய்வுக் குழுவினர் காரைக்குடியிலுள்ள 'இயூமன் காட்டேஜ்' வந்து சேர்ந்தனர். அதுபோது அங்கு கூடியிருந்த ஏரானமான தோழர்கள் தங்களின் பலத்த கைதட்டுதலின் மூலம் ஆய்வுக் குழுவின் வருகையால் தாங்கள் அடைந்த மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் சவுந்திர பாண்டியன், துணைச்செயலாளர் இராமநாதன், நகரச் செயலாளர் பால்ராஜ், தோழர்கள் கண்ணதாசன், இராம சுப்பையா ஆகியோர் மலர்மாலைகள் அணிவித்து ஆய்வுக் குழுவினரை வரவேற்றனர்.

பின்னர் ஆய்வுக் குழு தனது விசாரணையைத் துவக்கி ஐந்து தொகுதிகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளிடம் விவரம் பெற்று பதிவு செய்துகொண்டனர். விசாரணை இரவு 11-30 மணிக்கு முடிவுற்றது.

உத்தமர் சங்கரலிங்கனார் நாள்

ஆய்வுக் குழு கூட்டம் துவங்கப்படுவதற்கு முன், தமிழ் நாடு எனப் பெயரிட வேண்டுமென்று உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த உத்தமர் சங்கரலிங்கனாரின் அரும்பணியையும் தியாகத்தையும் குறிப்பிட்டுப் பொதுச்செயலாளர் பேசியதுடன், அனைவரும் எழுந்து நின்று தங்களின் வீரவணக்கத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டனர்.

ஆய்வுக் குழுவினர் 22—10—56 காலை 8-30 மணிக்கு காரைக்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்குப் புறப்பட்டனர். இராமநாதபுர மாவட்டச் செயலாளர், துணைச் செயலாளர், காரைக்குடி நகரச் செயலாளர், தோழர்கள் கண்ணதாசன், இராம-சுப்பையா ஆகியோரும், கழகத் தோழர்களும் உடனிருந்து வழி அனுப்பினர்.

தேர்தல் ஆய்வுக் குழுவினரின் வருகை செட்டி நாட்டு அரசியல் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

இப்படியும் பேசுகிருர் பண்டித நேரு!

'வறுமையை எதிர்த்துப் போராட்டம் தொடங்குங்கள்', என்று பண்டித நேரு மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

"நம் சொந்த பலத்தைக் கொண்டே நம் நாட்டைப் புனரமைக்க வேண்டும்; அன்னிய நாட்டையே நம்பியிருந்தால் நாம் பலமடைய முடியாது" என்றும் அவர் கூறியுள்ளார்.

சென்னைக்கு 61!

புதுடில்லி, அக். 21—

இந்தியா முழுவதும் 625 பரிட்சார்த்த வீடு கட்டும் திட்டங்களை அரசாங்கம் ஏற்றுள்ளது. இதற்காக ரூ 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களில் சென்னைக்கு 61 திட்டங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

****

தேர்தல் நிதி சிறப்புக் கூட்டம்

24—10—56 புதன் மாலை 5-30 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

பேசுவோர்:

அண்ணா

இரா. நெடுஞ்செழியன்

என். வி. நடராசன்

ஈ. வெ. கி. சம்பத்

கே. ஏ. மதியழகன்

★

'தேர்தலும் தி. மு. கழகமும்'

என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவர்

★

நன்கொடை ரூ. 1. அணு 8.

குறிப்பு:—கூட்டத்திற்கான நுழைவுச் சீட்டுகளை 20—10—56 சனி முதல் காலை 10 மணியிலிருந்து மாலை 6-மணி வரையில் தி. மு. க. தலைமை நிலையத்தில் பெற்றுக் கோள்ளலாம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

திருமங்கலத்தில் அண்ணா

★

26-10-56 மாலை 6-மணிக்கு, மாயூரம் வட்டம் திருமங்கலம் தி. மு. கழகச் சார்பில், தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

நாஞ்சில் மாவட்டத் தோழர்கட்கு:

"நவம்பர் 1-ந்தேதி மொழிவழி அடிப்படையில் பகுதிகள் பிரிக்கப்படுகின்றன. திரு—தமிழகத்தின் ஒரு பகுதியும், சென்னையோடு இணைக்கப்படுகிறது. அதனைக்கொண்டாட, நவம்பர் 2-ந்தேதி, தி. மு. கழகக் கிளைகளும் பொது மக்களும் முயற்சி எடுங்கள். அன்று பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நாகர்கோவில் வருகிருர் மாபெரும் ஊர்வலமும், நகர சபைத் திடலில் ஒரு பொதுக் கூட்டமும் நடைபெறும். பொதுச் செயலாளருக்குப் பொது மன்றங்கள், தி. மு. கழகக் கிளைகள், மாணவர் கழகங்கள் சார்பில் வரவேற்பளிக்கப்படும். பொதுச்செயலாளருக்கு வரவேற்புக் கொடுக்க விரும்புவோர் முன்கூட்டியே மாவட்டச் செயலாளரிடம் தெரிவித்து அனுமதி பெற்றுக்கோள்ளவும்"

என்று நாஞ்சில் மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம். குமாரசாமி அறிவிக்கிருர்.

சென்னைக் கூட்டத்தில் அண்ணா பேச்சு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நாட்டு உறவுகள் பற்றி நடைபெறும் பேச்சு வார்த்தைகள் முக்கியமானதாகத் தெரியலாம் மற்றொரு கட்சிக்கு!

"பிரிதோர் கட்சிக்கு வடக்கு எல்லை மீட்கப்படுவதில் அதிகமான அக்கரை இருக்கலாம்.

"இப்படி கம்யூனிஸம், சோஷலிஸம், தமிழரசுக் கழகம், தி. மு. கழகம் ஆகிய பல கட்சிகளுக்கும் ஒவ்வொரு மாதிரியான கொள்கைகளும் திட்டங்களும் இருக்கின்றன.

"இப்படிப் பல கட்சிகள் இருப்பதற்குக் காரணம் அவை அத்தனையும் இருக்கவேண்டி அவை எல்லாவற்றிற்கும் நாட்டில் வேலைகள் இருக்கின்றன—பிரச்சினைகள் இருக்கின்றன.

"நாட்டில் நல்லாட்சி இருந்தால், இப்படிப் பல கட்சிகளுக்கு வேலை இருக்காது; பேசுவதற்குப் பிரச்சினைகள் இருக்கமாட்டா; அதற்காகப் போராட்டங்கள் நடைபெற வேண்டிய அவசியமும் இல்லாமற் போகும்.

"கராச்சி காங்கிரசில் தீர்மானித்தபடி, 'வெள்ளையன் வெளியேறிய பிறகு இந்தியாவில் எவருக்கும் ரூ 500-க்கு மேல் சம்பளம் இல்லை,' என்ற நிலைமை ஏற்பட்டிருந்தால்—அந்தத் திட்டத்தை நாட்டை ஆளும் காங்கிரசாட்சி நடத்திக் காட்டியிருந்தால், இப்போது, 'கொள்ளைச் சம்பளம் கொடுப்பதை நிறுத்த வேண்டும்' என்று கோரி சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் இருந்திருக்க மாட்டார்!

"இப்படித்தான், நாட்டு மக்களுக்குள்ள குறைகள் பலவும் நாடாளும் காங்கிரசால் களையப்படாமையால்—காங்கிரஸ் ஆட்சியில் மக்களின் குறைகள் வளர்ந்துகொண்டே இருப்பதால், பல கட்சிகள் வேலை செய்கிற சூழ்நிலை ஏற்பட்டிட்டது.

"ஆனால், காங்கிரசுக்கு எதிராக உள்ள கட்சிகளிடையே மக்களின் குறைகளைப் போக்குவதற்கு, ஒருமைப்பட்ட மனப்போக்கு இல்லாமல் இருக்கின்றது. எதிர்க் கட்சிகள், ஒரு கையில் உள்ள ஐந்து விரல்களைப்போல் இருந்தால் பரவாயில்லை; ஆனால், இன்று அவை அப்படி இல்லை! கட்சிகளுக்கிடையே, ஒரு கை விரல்களுக்கிடையில் வேற்றுமைகள் இருப்பதைப்போல் வேற்றுமைகள் இருக்கலாம்; ஆனாலும், ஒன்றுபட்ட மனப்போக்கு என்ற வகையில் சேர்ந்திருந்தால் பரவாயில்லை; நிலைமை அப்படியில்லை!

"அதனால்தான், நேரு பண்டிதர் கூட, சற்று ஆணவத்துடன் குறிப்பிட்டார் என்று கருதுகிறேன்—'பல நொண்டிகள் சேர்ந்து ஒரு முழு மனிதனுகிவிட முடியாது' என்று! உண்மைதான்!

"இன்று எதிர்க்கட்சிகள் 'ஒருவர் கரத்தில் மூன்று விரல்கள்—மற்றவர் கரத்தில் இரண்டு விரல்கள்,' என்ற நிலையில்தான் இருக்கின்றன. இதில்—இரண்டு விரல்காரன் மூன்று விரல்காரனைக்கேலிசெய்கிருன்; மூன்று விரல்காரன் ஒரு விரல்காரனைக் கேலி செய்கிருன் — என்ற நிலைமைவேறு இருக்கிறது; ஒரு கட்சி மற்றக் கட்சியை இழிவாகப் பேசும் நிலைமையைத்தான் குறிப்பிடுகிறேன்.

"தோழர் ஜீவானந்தம், திராவிட நாடாவது—சுடுகாடாவது' என்கிருர்; பி. சோ. கட்சியினர் பேசினுல், 'நாட்டைத் துண்டாட வேண்டும் என்பவர்கள் தேசத் துரோகிகளாயிற்றே! இந்தப் பிளவு சக்தி-யை எப்படி அனுமதிப்பது?' என்று பேசுகிருர்கள்.

"சோஷலிஸ்டுகள்பேசும்போது, 'பி. சோ. ஒரு கட்சியா?' என்று கேட்கிறார்கள்.

பெரியார் பேசினுல், அண்ணாதுரை ஒரு மனிதனு? அவன் நடத்துகிற கட்சி ஒரு கட்சியா?' என்று கேட்கிருர்.

"இப்படி எதிர்க் கட்சியிலிருக்கிற நாம், ஆளுக்கு ஆள் மற்றவரைப் பற்றிப் பேசிக்கொண்டேயிருக்கிறோம்; காங்கிரஸ் வாழுகிறது!

"திராவிட நாடு பற்றி காங்கிரசார் பேச ஆரம்பித்தால், தி. மு. கழகத்தைப் பற்றி தோழர் ஜீவானந்தம் குறிப்பிட்டதையே எடுத்துக் கூறி, 'ஜீவா இப்படிக் கூறுகிருர்,' என்று பேசுகின்றனர்.

"நம்மில் ஒருவர் மற்றவரைப் பற்றிப் பேசியதையே காங்கிரஸ் எடுத்துச் சொல்கிறது. இப்படிக் காங்கிரசுக்கு, எதிர்க்கட்சிகள் எல்லாம் பேச்சு மேடையாகப் பயன்படுகின்றன!

"நமது இந்த பலவீனத்தினுலேதான் காங்கிரஸ்—எத்தனைதான் கோளாறுகள் உடையதானுலும், வாழமுடிகிறது! தேர்தலில் வெற்றி பெறுவதும் சுலபமாகிறது!

"எனவேதான், தி. மு. கழகம் எதிர்க்கட்சிகளிடையே ஒரு ஒன்றுபட்ட மனப்போக்கு வேண்டுமெனக் கருதுகிறது; அந்த மனப்போக்கு உருவாக வழி செய்வதும் தி. மு. கழகத் திட்டங்களில் ஒன்ருகும்.

"இதனுல்தான், மாற்றுக் கட்சியினர் நம்மை எத்தனைதான் இழித்தும் பழித்தும் பேசினுலும் ஏசினுலும், நாம் எவரையும் திட்டுவதில்லை; இழிவாகப் பேசுவதில்லை

"மாற்றுக் கட்சிகளிடமிருந்து நாம் நல்லெண்ணத்தை எதிர்பார்க்கிறேம்.

"பசுவிடம் பால் இருக்கிறது; அதைக் கறக்க முற்படும்போது, சில பசுக்கள் காலாலும், சில வாலாலும், சில பசுக்கள் கொம்புகளாலும் கூட நம்மைத் தாக்கலாம்; ஆனாலும், நமக்குப் பால் வேண்டுமானுல், அந்தத் தாக்குதல்களைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்.

"அதுபோலத்தான், மாற்றுக் கட்சிகளிடமிருந்து நல்லெண்ணப் பால் பெறுவதற்காக நாம் அவர்களது இகழ்ச்சியையும் ஏசலையும் தாங்கிக் கோள்கிறேம்.

"கடைசிவரை முயற்சிப்போம்; அப்போதும் கிடைக்காமல் போய்விட்டால், அந்த ஏக்கத்தினுலேயேகூட நாம் ஒன்றும் இதரரை ஏசத்தேவை இல்லை. 'மதுரமான பால்தரக் கூடியவை' என்றே நாம் மாற்றுக் கட்சியினரைப் பற்றிக் கருதுகிறேம். மலட்டு மாடுகள்பற்றி நமக்குக் கவலை இல்லை."

2,500 புத்தகங்கள் கொண்ட நூல் நிலையம் திறப்பு

சென்னை, அக் 22—

ஸ்ரீபெரும்புதூரில், சென்னை அரசாங்க விவசாய அமைச்சர் பக்தவத்சலம் 2,500 புத்தகங்களைக் கொண்ட ஓர் நூல் நிலையத்தை, சுற்றுப்புறத்திலுள்ள 150 கிராம மக்கள் நலனுக்காக ரூ. 6000 செலவில் வாங்கப்பட்ட கட்டிடத்தில் திறந்துவைத்தார்.

அ. இ. தபால் ஊழியர் சங்கப் பொதுக்கூட்டம்

24-10-56 மாலை 6-மணிக்கு அ. இ. தபால் ஊழியர் சங்கச் சார்பில் (போஸ்ட்மேன் நான்காம் வகுப்பு ஊழியர் பகுதி), சென்னை-எழும்பூர் தபால் நிலையத்தில் திரு. வ. கோதண்டபாணி தலைமையில் நடைபெறும்; திரு பி. எம் கிருஷ்ணன் சொற்பொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.